இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 02-03-2024

# அந்த மோடியா ? இந்த லேடியா ?- 2

பிரதமர் மோடிக்கு கடந்த காலத்தை விரிவாக விளக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.

ஷக்தி சின்கா என்பவர் வாஜ்பாய் பற்றி ஒரு புத்தகம் எழுதினார். ‘ஒரு பிரதமரான வாஜ்பாய்க்கு தேனிலவுக் காலம் என்பதே கிடைக்காமல் போனது. ஜெயலலிதா முதல் நாளில் இருந்தே கண்ணில் விரலை விட்டு ஆட்டினார். ஜெயலலிதா தனக்கு எதிரான வழக்குகளில் இருந்து தப்பிக்க வாஜ்பாய் தனக்கு உதவ வேண்டும் என்று விரும்பினார். அரசாங்கமும் அவர்களுக்கு முடிந்த வரை சட்டபூர்வமாக உதவியது.’ என்று எழுதினார்.

‘அவுட்லுக்’ ஆசிரியர் வினோத் மேத்தா, பிரதமரைச் சந்திக்கச் சென்றதாகவும், அப்போது வாஜ்பாய் ஆழ்ந்த சிந்தனையில் இருந்ததாகவும், என்ன இப்படி இருக்கிறீர்களே என்று வினோத் மேத்தா கேட்டதாகவும், ‘அடுத்து என்னைச் சந்திக்க ஜெயலலிதா வரப்போகிறார்’ என்று வாஜ்பாய் சொன்னதாகவும் அந்தப் புத்தகத்தில் இருக்கிறது. அந்த ஜெயலலிதாவைத்தான் புகழத் தொடங்கி இருக்கிறார் மோடி.

**பா.ஜ.க. ஆட்சி கவிழ்க்கப்பட்ட அன்று, ‘நான் இன்று நிம்மதியாக உறங்குவேன்’ என்றார் வாஜ்பாய். ‘எனது வாழ்க்கையில் மனநிம்மதி இல்லாத காலம் ஜெயலலிதாவுடன் கூட்டணி அமைத்திருந்த காலம்’ என்றார் வாஜ்பாய். வாஜ்பாய் நிம்மதியைக் கெடுத்த ஜெயலலிதாவைத்தான் புகழ்கிறார் மோடி.**

இவை அனைத்துக்கும் மேலாக, மோடி மறக்கக் கூடாத ஒரு முழக்கம் இருக்கிறது. “மோடியா? லேடியா” என்று கேட்டு தேர்தல் பிரச்சாரம் செய்தவர் ஜெயலலிதா. ‘இந்தியாவின் சிறந்த நிர்வாகி மோடி அல்ல, இந்த லேடிதான்’ என்று பிரச்சாரம் செய்தார் ஜெயலலிதா. குஜராத் வளரவே இல்லை, தமிழ்நாடுதான் வளர்ந்துள்ளது என்று சொன்னவர் ஜெயலலிதா.

2014 ஏப்ரல் 21 அன்று சென்னையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் ஜெயலலிதா பேசுகிறார்…

> “ ஒரு மாநிலம் வளர்ச்சி பெற்றிருக்கிறதா? அந்த வளர்ச்சி ஏழை எளிய நடுத்தர மக்களைச் சென்றடைந்து இருக்கிறதா? ஒடுக்கப்பட்ட மக்கள் வளர்ச்சி அடைந்திருக்கிறார்களா என்பதைத் தெளிவுபடுத்தும் கண்ணாடியாக விளங்குபவை, மனிதவளக் குறியீடுகள். விளம்பர வளர்ச்சி எது என்பதையும், உண்மையான வளர்ச்சி எது என்பதையும் இந்த மனிதவளக் குறியீடுகள் தெளிவுபடுத்தும்.
>
> குஜராத்தில் 16.6 சதவிகித மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளனர். ஆனால் தமிழகத்தில் 11.3 சதவிகித மக்கள் தான் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளனர். உயிருடன் பிறக்கும் ஆயிரம் குழந்தைகளில் ஒரு வயதை அடைவதற்குள் 38 குழந்தைகள் குஜராத்தில் இறந்து விடுகின்றன. ஆனால் தமிழகத்தில் ஒரு வயதை அடைவதற்குள் இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை 21 மட்டுமே. ஒரு லட்சம் குழந்தைப் பிறப்பில் தாய் இறப்பு விகிதம் குஜராத்தில் 122. தமிழகத்தில் இது 90 தான்.
>
> கடந்த 2011 - 12 ஆம் ஆண்டு உணவு தானிய உற்பத்தி குஜராத்தில் 88.74 லட்சம் மெட்ரிக் டன்தான். ஆனால் தமிழ்நாட்டில் இது 101.51 லட்சம் மெட்ரிக் டன் என்ற உயரளவு ஆகும்.
>
> 2011 முதல் 2013 வரை குஜராத்தில் தொடங்கப்பட்ட சிறு குறு மற்றும் நடுத்தரத் தொழில்களின் எண்ணிக்கை 1,20,016. ஆனால், தமிழ்நாட்டில் புதிதாகத் தொடங்கப்பட்ட தொழில்களின் எண்ணிக்கை 1,61,732. அதாவது 41 ஆயிரத்து 716 தொழில்கள் கூடுதலாக தமிழ்நாட்டில் துவங்கப்பட்டுள்ளன.
>
> 2012 - 13 ஆம் ஆண்டு குஜராத்தில் பெறப்பட்ட அன்னிய முதலீடு வெறும் 2,676 கோடி ரூபாய். ஆனால், தமிழ்நாட்டில் பெறப்பட்டதோ 15,252 கோடி ரூபாய். ஊரகப் பகுதிகளில் தனிநபர் சராசரியாக செலவு செய்வது குஜராத்தில் 1,430 ரூபாய் ஆகும். தமிழகத்தில் இது 1,571 ரூபாய் ஆகும். நகர்ப்புறப் பகுதிகளில் தனிநபர் சராசரி செலவு குஜராத்தில் 2,472 ரூபாய்தான். தமிழ்நாட்டில் இது 2,534 ரூபாய் ஆகும்.
>
> குஜராத்தில் உள்ள தொழிற்சாலைகள் 22 ஆயிரத்து 220. ஆனால்தமிழ்நாட்டில்உள்ளதொழிற்சாலைகள்எண்ணிக்கை 36 ஆயிரத்து 996. குஜராத்தில் உள்ள தொழிலாளர் எண்ணிக்கை 10 லட்சத்து 50 ஆயிரம். தமிழ்நாட்டில் தொழிலாளர் எண்ணிக்கை 15 லட்சத்து 90 ஆயிரம்.
>
> கடந்த பத்து ஆண்டுகளில் குஜராத்தில் மகளிருக்கு எதிரான குற்றங்கள் 65 சதவிகிதம் அதிகரித்துள்ளன. தமிழ்நாட்டில் மகளிருக்கு எதிரான குற்றங்கள் 29 சதவிகிதம் குறைந்துள்ளது.
>
> பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அதிக மக்கள் பயன்பெறும் மாநிலம் தமிழகம். குஜராத்தில் இதற்கு நேர்மாறான நிலைமையே உள்ளது. பொது விநியோகத் திட்டத்திலிருந்து உணவுப் பொருள்களை கள்ளச் சந்தையில் விற்பது குஜராத்தில் 63 சதவிகிதம் ஆகும். இது தமிழ்நாட்டில் 4 சதவிகிதம்தான்.
>
> வாக்காளர்களே இப்போது சொல்லுங்கள்… சிறந்த நிர்வாகி யார்? குஜராத்தைச் சேர்ந்த மோடியா அல்லது தமிழகத்தைச் சேர்ந்த இந்த லேடியா?”

- என்று கேட்டார் ஜெயலலிதா.

இவற்றை மோடி மறந்திருக்கலாம். தமிழ்நாட்டு மக்கள் மறக்கவில்லை.

**பெங்களூரு நீதிமன்றத்தில் நான்காண்டு சிறைத்தண்டனையும் - 100 கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்ட ஜெயலலிதாவின் புகழை மோடி பாடுவதன் மூலமாக மோடியின் ஊழல் முகமும் அம்பலம் ஆகிறது. தமிழ்நாட்டில் சொல்வதற்கு அவருக்கு ஏதுமில்லை என்பதும் புரிகிறது.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தனது 71வது பிறந்த நாளையொட்டி கோபாலபுரம் இல்லத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தனது 71வது பிறந்தநாளையொட்டி சி.ஐ.டி. காலனி இல்லத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் துணைவியார் திருமதி ராஜாத்தி அம்மாள், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி மற்றும் அவரது கணவர் அரவிந்தன் ஆகியோர் உள்ளனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.3.2024) தனது 71வது பிறந்தநாளையொட்டி, சென்னை, அண்ணா அறிவாலயத்தில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள் – முன்னாள் உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுடன் கேக் வெட்டி கொண்டாடினார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள்!

# மேலும் பல ஆண்டுகள் நாட்டிற்குச் சேவை செய்திடுக!

### குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வாழ்த்து!



புதுடெல்லி, மார்ச் 2 - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து, இந்திய குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்கள், விடுத்துள்ள செய்தியில்,

“மேலும் பல ஆண்டுகள் தொடர்ந்து நாட்டிற்கு அர்ப்பணிப்பு டன் சேவை புரிந்திடுவீர்!” என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்திய குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்கள், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**உங்களுக்கு எனது பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**இறைவன் உங்களுக்கு நல்ல ஆரோக்கியத்தையும், மகிழ்ச்சியையும், மேலும் பல ஆண்டுகள் தொடர்ந்து நாட்டிற்கு அர்ப்பணிப்புடன் சேவை செய்யவும் அருளட்டும்.**

இவ்வாறு - குடியரசுத் தலைவர் அவர்கள், தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்கள்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள்!

# பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து!



புதுடெல்லி, மார்ச் 2 - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி - இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள். அவர் நல்ல ஆரோக்கியத்துடன் நீடுழி வாழ வாழ்த்துகிறேன்.**

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில், பிரதமர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - இனமானப் பேராசிரியரின் புதல்வர் அ.அன்புச்செல்வன் பிறந்த நாள் வாழ்த்து!

## முதல் பக்கத் தொடர்ச்சி

இரண்டு நாட்களுக்கு முன்னர் கலைஞர் நினைவிடமும், அண்ணா நினைவிடமும் சென்று கண்டு பிரமிப்புடன் வந்தேன்.

ஓர் பிரமாண்டமான அதிசயத்தக்க நினைவிடத்தை கலைஞருக்கு அமைத்து, அவரது வார்ப்பு தாங்கள் என்பதை மெய்யாக்கி விட்டீர்கள்.

உலக நாடுகளில் பல தலைவர்களின் நினைவிடங்களை எல்லாம் மிஞ்சும் வகையில் புதுமையுடனும், சிறந்த தற்கால தொழில்நுட்பத்துடன் கலைஞர் நினைவிடம் வடிவமைக்கப் பட்டுள்ளது. உங்களது கற்பனையில் இத்திருத்தலம் தமிழர்கள் விரும்பி சுற்றிப்பார்த்து மகிழத்தக்க வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

தாங்கள் பதவியேற்ற பொழுது சொல்லியது, தி.மு.க. கூட்டணிக்கு வாக்களிக்காதவர்கள், நாம் தி.மு.க. கூட்டணிக்கு ‘வாக்களிக்காமல் போய் விட்டோமே’ என வருந்தும் வகையில் திராவிட மாடல் ஆட்சி தொண்டாற்றும் என்று பறைசாற்றினீர்கள், அதைப் போலவே கழகத்தவர் மட்டுமல்லாமல், ஏனைய தமிழ்மக்களும் வேற்றுமைகளை மறந்து சுற்றிப்பார்த்து வியக்கும் வகையில் இவ்விரு நினைவிடங்களும் அமைந்துள்ளன.

தனது பன்முக ஆற்றலால் பல துறைகளில் முத்திரை பதித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். தொட்ட துறைகளில் எல்லாம் உச்சம் தொட்டவர் அவர். ஆற்றல்களின் பல்கலைக்கழகம் அவர்.

எதிலும் புதுமைகளையும் பிரமாண்டமான வகையில் செயல் படுத்தியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

புத்தாயிரத்தில் கடல் அலைகளுக் கிடையே 133 அடி அய்யன் திருவள்ளுவர் சிலையை நிறுவியவர் கலைஞர் அவர்கள்.

சென்னையில் வள்ளுவர் கோட்டம் கண்டவர்.

சிலப்பதிகாரத்தை நினைவு கூர பூம்புகாரில் கலைக்கூடம் அமைத்தவர்

தனது அரசியல் ஆசான் பேரறிஞர் அண்ணாவிற்கு அண்ணா சதுக்கம் அமைத்தவரும் அவரே,

கழகத்திற்கு அண்ணா அறிவாலயம் தந்தவரும் அவரே,

பொதுமக்களுக்காக ஜெமினியில் அண்ணா மேம்பாலம் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே நிர்மாணித்தவரும் அவரே,

பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டு நிறைவு விழா நினைவாக ஆசியாவிலேயே மிகப் பெரிய நூலகத்தை கட்டியவரும் கலைஞர் தான்.

தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்து வாங்கித் தந்தவரும் அவரே.

பல பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏராளமான கலை அறிவியல் கல்லூரிகள் நிறவியது, மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரிகள் துவங்கியது விளைவாக உயர் கல்வியில் தமிழ்நாடு முன்னணியில் திகழ காரணமானவர்,

கணினியின் வரவை எதிர்கொண்டு டைடல் பார்க்கை நிறுவியது மற்றும் தமிழை இணையத்தில் வெற்றிகரமாக உலவச் செய்தது.

பல அணைகள் கட்டியதன் விளைவாக வேளாண் உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு பெற்று சிறந்த மாநிலமாகவும் திகழ காரணமானவர்.

இப்படி அவர் தமிழ் மொழி வளர்ச்சி, தமிழர் நலமும், தமிழ்நாட்டின் நலமும் என தனது பொது வாழ்வில் முழுவதையும் செலவிட்டவர்.

மேற்கூறியபடி பல முதல்களுக்கு காரணமாக முத்தானவருக்கு முதல்வரான தாங்கள் எழுப்பிய நினைவாலயம் தமிழ் உள்ளவரை உங்கள் பெயரை உச்சரித்து கொண்டேயிருக்கும்.

வாழ்க தங்களின் தமிழர் தொண்டு.

வெல்க தங்கள் பயணம்.
வளர்க உங்கள் புகழ்,
வெல்க தி.மு.க,
நாடும் நமதே, நாற்பதும் நமதே!

நட்புடன்,
**அ.அன்புச்செல்வன்**
29/02/2024.

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் - அ.அன்புச்செல்வன் குறிப்பிட்டுள்ளார்.

# தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

*சென்னை, மார்ச் 2 - தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவுச் செயலாளர் அ.சுபேர்கான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் நாளை (03.03.2024 - ஞாயிறு) காலை 10 மணியளவில், அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நடைபெறவுள்ளது.*

*இந்நிகழ்வில் சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் உள்ளிட்ட கழக மாவட்டங்களைச் சேர்ந்த சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாவட்ட, மாநகர, தலைவர், துனணத் தலைவர், அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*பொருள்:*

*நம்மில் ஒருவர் நமக்கான தலைவர் மு.க.ஸ்டாலின் கருத்தரங்கம் மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சி தொடர்பாக.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*